**24/07/2025**

**CC.30/2022**

**புகார்தாரர் சக்திவேல், த/பெ.ஆறுமுகம் என்பவரின் சத்திய பிரமாண வாக்குமூலம்.**

நான் புன்னை கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். 04.12.2019ம் தேதி முனுசாமி மற்றும் ஏழுமலை என்பவரிடமிருந்து சொத்தை கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சொத்தில் பனஞ்சாலைகள் உள்ளது. உள்ளே செல்லும் வழிக்காக பனை மரத்தை வெட்டி வழி செய்தேன். அதனை ஏழுமலை என்பவர் தடுத்து நிறுத்தினார். இதற்கு மேல் இந்த பக்கம் வந்தால் உன்னை வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார் இது சம்மந்தமாக 4.10.2020ம் தேதி கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்ததன்பேரில் இருவரையும் அழைத்து விசாரணை செய்தார்கள் அதன் பின்னர் விசாரணையில் அவர் அவர் நிலத்தை அளந்து கல் நட்டுக்கொள்ளுமாறு அறிவுரை கூறினார்கள். அதன் பேரில் சர்வேயரை வைத்து அளந்து கல் நட்டுக்கொண்டோம். அதனை ஏழுமலை என்பவர் பிடுங்கி வீசிவிட்டார். பிறகு நான் கிரையம் பெற்ற சொத்துக்குள் வரக்கூடாது என்று என்னை மிரட்டினார். அதன் பின்னர் கடந்த 10.11.2021ம் தேதி காலை 7.00 மணிக்கு கழனிக்கு சென்றபோது ஏழுமலை என்பவர் என்னை இந்த பக்கம் வரக்கூடாது என்று என்னை வந்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.